## எந்தப் பணியைக் கொடுத்தாலும்,

# அனைவரும் பாராட்டும் வகையில் செய்பவர் திருமாவேலன்!

### இல்லத் திருமண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்



**சென்னை, செப். 8 -**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (07.09.2026) சென்னையில் நடைபெற்ற கலைஞர் தொலைக்காட்சி செய்தி பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் திருமாவேலன் அவர்களது இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி ஆற்றிய உரையில், "எந்தப் பணியைக் கொடுத்தாலும் அனைவரும் பாராட்டும் வகையில் செய்பவர் திருமாவேலன்" என்று புகழாரம் சூட்டினார்.**

மணவிழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

தமிழே வாழ்வு எனத் தொண்டாற்றி வரும் புலவர் படிக்கராமு அவர்களின் குடும்பத்தில், அதுவும் குறிப்பாகத் திருக்குறள் முறைப்படி நெறிப்படி, நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

புலவர் மு. படிக்கராமு ப.முத்துலக்குமி அம்மாள், சு. கிருஷ்ணன் கி.அழகம்மாள் ஆகியோரின் பேத்தியும், கலைஞர் தொலைக்காட்சி செய்திகள் பிரிவுத் தலைவர் நம்முடைய புரட்சி எழுத்தாளர் - திராவிட இயக்க எழுத்தாளர் இனிய சகோதரர் திருமாவேலன் - ரேணுகா திருமாவேலன் இணையரின் அன்பு மகளுமான டாக்டர் அமிர்தா அவர்களுக்கும்,

கா. சுந்தரம் சு. இலட்சுமி அம்மாள், இரா. பாண்டியராஜன் பா. ரமணி அம்மாள் ஆகியோரின் பேரனும், டாக்டர் பாலசுப்பிரமணியன் - சுதா பாலசுப்ரமணியன் இணையரின் அன்பு மகனுமான டாக்டர் ரபிந்திரன் அவர்களுக்கும் நடைபெற்றிருக்கும் இந்தத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துவதில், உங்களோடு சேர்ந்து நானும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

**தமிழர்களின் நெறிப்படி நடைபெற்ற திருமணம்!**

இந்த இனிய மணவிழா திருக்குறள் நெறிப்படி நடந்தேறியிருக்கிறது. இதுதான் தமிழர்களின் நெறி! இதுதான் தமிழர்களின் பண்பாடு! இதைத்தான் திராவிட இயக்கம் நூறாண்டு காலமாக வலியுறுத்தி, தொடர்ந்து நிறைவேற்றிச் செயல்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இதுபோன்ற சுயமரியாதைத் திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை அன்றைக்கு நாம் பெற்றிருக்கவில்லை. ஆனால், முதன்முதலில் ஒரு மாநிலக் கட்சி நம்முடைய தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி உதயமாகி, 1967இல் அண்ணா முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுச் சட்டமன்றத்திற்குள்ளே சென்று, நம்முடைய தமிழ்நாட்டிற்காக முத்தான மூன்று திட்டங்களை நிறைவேற்றித் தந்தார்கள்.

ஒன்று, இருமொழிக் கொள்கை. இன்னொன்று, தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக்கூடிய நிகழ்வு. அடுத்து, சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாவதற்கான சட்டம். அண்ணா அவர்களால் சட்டமன்றத்திலே சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வமாகச் செல்லுபடியாகும் என்று நிறைவேற்றித் தந்திருக்கும் அந்தத் திருமணம்தான், இன்றைக்கு இங்கே நடந்தேறியிருக்கிறது.

இதுபோன்ற திருமணங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களும், இந்த இயக்கத்தின் முன்னோடிகளும் ஆயிரக்கணக்கான அளவில் நடத்தி வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து நாமும் அதை நடத்தி வருகிறோம்.

இல்வாழ்க்கையைப் பற்றி வள்ளுவர் சொல்கிறபோது, இல்வாழ்க்கை என்பது அன்பும் அறனும் கொண்டதாக அமைந்திட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய திருமாவேலன் அவர்களுடைய தந்தை புலவர் படிக்கராமு அவர்கள், திருக்குறளைப் பரப்புகிற பணியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதற்காகவே அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய பணியைப் பாராட்டி, கடந்த திராவிட மாடல் ஆட்சியில் அவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்திருக்கிறோம். தலைமுறைகளைக் கடந்தும் இன்றும் இந்தப் பணியை நம்முடைய திருமாவேலன் அவர்களுடைய குடும்பத்தார் தொடர்ந்து செய்து கொண்டிருப்பது பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது, பெருமைக்குரியது, போற்றுதலுக்குரியது!

> **"மனிதர்களின் நோய்க்கு இன்றைக்கு நீங்கள் எப்படி மருந்துகளைக் கண்டு பிடித்துச் சிகிச்சை வழங்கி வருகிறீர்களோ, அதுபோல இன்றைக்கு நாட்டிலே உள்ள 'சமூக நோய்க்கும்' மருந்து கண்டுபிடித்து, அதற்கும் நீங்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். அந்தப் பணியை நிறைவேற்றும் கடமையை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்."**

**பாராட்டும் வகையில் பணியாற்றுபவர் திருமாவேலன்!**

நம்முடைய திருமாவேலனிடம் எந்தப் பணியைக் கொடுத்தாலும், அதை நேர்த்தியாக, சிறப்பாக, அனைவரும் பாராட்டும் வகையில் நிறைவேற்றிக் காட்டும் ஆற்றலைப் பெற்றவர் அவர். இன்றைக்குக் கலைஞர் தொலைக்காட்சியில் செய்திப் பிரிவிலே தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகத் தன்னுடைய கடமையை நிறைவேற்றி வருகிறார். அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர்முரசாக விளங்கிக் கொண்டிருக்கும், தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையாக விளங்கிக் கொண்டிருக்கும் 'முரசொலி' நாளிதழின் தலையங்கத்தை தினமும் நீங்கள் படித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்தத் தலையங்கத்தை நம்முடைய திருமாவேலன் அவர்கள்தான் தொடர்ந்து எழுதி வருகிறார்.

குறிப்பாக இளைஞர்களுக்கு, இளைய சமுதாயத்தினருக்கு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு மட்டுமல்லாது, நம்முடைய திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும், அதிலும் குறிப்பாக இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலைகளையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லி, அந்தப் பணியை அவர் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்.

**முரசொலி தலையங்கத்தை மக்களிடையே கொண்டு சேர்ப்பீர்!**

நான் இந்த நேரத்தில் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, திருமாவேலன் அவர்கள் முரசொலியில் எழுதும் தலையங்கத்தைத் தொடர்ந்து இங்கே வந்திருக்கும் அனைவரும் படித்தாக வேண்டும். படிப்பது மட்டுமல்லாமல், மக்களிடம் கொண்டு சேர்த்தாக வேண்டும் என்ற அந்த வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவருடைய பணியைப் பாராட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழா நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த வகையில் இந்த மாதம் 15 ஆம் தேதி சென்னையில் நடைபெறவுள்ள முப்பெரும் விழாவில், தமிழறிஞர்களுக்கு, சான்றோர்களுக்கு, திராவிட இயக்கத்தின் முன்னோடிகளுக்கு விருதுகளை வழங்கி நாம் தொடர்ந்து பெருமைப்படுத்தி வருகிறோம்.

அந்த வகையில் இந்த ஆண்டு முரசொலி அறக்கட்டளையின் சார்பில், நம்முடைய 'முரசொலி செல்வம் விருது' நம்முடைய திருமாவேலன் அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நீங்கள் ஏற்கனவே பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். அதனை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, அவருடைய இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழாவில் அவரைப் பாராட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே மணமகன், மணமகள் இரண்டு பேருமே மருத்துவர்கள். மருத்துவர்களாக இருக்கும் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, மனிதர்களின் நோய்க்கு இன்றைக்கு நீங்கள் எப்படி மருந்துகளைக் கண்டு பிடித்துச் சிகிச்சை வழங்கி வருகிறீர்களோ, அதுபோல இன்றைக்கு நாட்டிலே உள்ள 'சமூக நோய்க்கும்' மருந்து கண்டுபிடித்து, அதற்கும் நீங்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். அந்தப் பணியை நிறைவேற்றும் கடமையை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்.

அடுத்து, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் ஆண் குழந்தையாக இருந்தாலும், பெண் குழந்தையாக இருந்தாலும், அந்தக் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்ற வேண்டுகோளை வைத்து விடைபெறுகிறேன்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டராய்" மணமக்கள் வாழ்க! வாழ்க! வாழ்க! என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்

# சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கோரி தனி நபர் தீர்மானம்!

## பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தார்!

**சென்னை, செப்.8-**

**குளறுபடிகளற்ற சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வலியுறுத்தி தனி நபர் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து சட்டப்பேரவைத் தலைவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடிதம் அளித்துள்ளார்.**

குளறுபடிகளுக்கு இடம் தராமல் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையைக் காப்பாற்றச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்ற வேண்டும் என்றும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்து தனி நபர் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து சட்டப்பேரவைத் தலைவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடிதம் அளித்துள்ளார்.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் நோக்கமே பட்டியலினச் சமூக மக்களின் எண்ணிக்கையைப் போல, OBC மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் அவர்களது கல்வி, சமுதாய, பொருளாதார நிலைமையையும் அறிந்துகொள்வதுதான் என்பதால் ஒன்றிய, மாநில அரசுகளின் OBC சாதிகளின் பட்டியலை வைத்து, அதிலிருந்து மக்கள் சாதிப்பெயரைத் தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றினால்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம் நிறைவேறும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

---

### பெருங்களத்தூர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்

# எஸ்.சேகர் எம்.சி. - எஸ்.கமலா சேகர் எம்.சி. இல்லத் திருமண விழா!

## முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி வாழ்த்துரை!

காஞ்சிபுரம், செப். 8-

காஞ்சி வடக்கு மாவட்டம், பெருங்களத்தூர் தெற்கு பகுதிக் கழக செயலாளர் எஸ்.சேகர் எம்.சி., - எஸ்.கமலா சேகர் எம்.சி. ஆகியோரின் புதல்வி டாக்டர் எஸ்.கிர்த்திகா - ஆரணி ரகுநாதபுரம் டாக்டர் ஆர்.அமுதன் பிரேம்குமார் - திருமதி டாக்டர் ஏ.துளசி பிரியா ஆகியோரின் புதல்வர் டாக்டர் ஏ.அஜய் ஆகியோரின் திருமண விழா கழகத் தலைவர், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துகளுடன்



13.9.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி அளவில் சென்னை 95, வானகரம் எண் 103, அயனம்பாக்கம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலசில் நடைபெறுகிறது.

இம்மண விழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மீ.அ.வைத்திலிங்கம், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் பல்லாவரம் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ் மற்றும் தலைமை கழக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர், உறவினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எஸ்.மனோகர் - தங்கம் - எஸ்.சாந்தி -சொக்கப்பா, எஸ். ஆனந்த் - ரம்யா, பெருங்களத்தூர் தெற்கு பகுதி மாணவரணி எஸ்.சாய் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

---

### தி.மு.க. குறித்து அவதூறு பேசுவதையே அரசியல் தகுதியாக கருதுகிறார் விஜய்

# சத்தமாக சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல - சபையை சர்க்கஸ் கூடாரமாக மாற்றியிருக்கிறார்கள்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.8-**

**தலைவர் கலைஞர், தி.மு.க.வை குறித்து அவதூறாக பேசுவதையே அரசியல் தகுதியாக இன்னும் எத்தனை காலத்துக்கு நினைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை என்றும், சத்தமாகச் சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல என்றும், சபையை சர்க்கஸ் கூடாரமாக மாற்றியிருக்கிறார்கள் என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**



தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

வரலாற்றை பேச வேண்டும் என்றால் நீதிக்கட்சி காலத்தில் இருந்து துவங்க வேண்டும். நாங்கள் இந்தத் தமிழ்ச் சமூகத்துக்காக என்ன செய்தோம் என்பதிலிருந்து தொடங்க வேண்டும். அந்த வரலாறு குறித்து தவெகவிற்கும், அதன் முதல்வர் ஜோசப் விஜய்க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

தலைவர் கலைஞரை பற்றியும், தி.மு.க.வை குறித்து அவதூறாக பேசுவதையே அரசியல் தகுதியாக இன்னும் எத்தனை காலத்திற்கு நினைத்துக் கொள்ள போகிறார்கள் என்று தெரியவில்லை. எல்லாவற்றையும் நம்புவதற்கு ஒரு கூட்டம் இருக்கும் வரை, எதை வேண்டுமானலும் பேசுவதற்கு ஒரு கூட்டமும் இருந்துக் கொண்டேதான் இருக்கும் என தனது பதிவில் கடுமையான விமர்சனத்தினை கனிமொழி முன்வைத்துள்ளார்.

அதோடு காவல்துறை மீதான மானிய கோரிக்கை விவாதத்திற்கு பதிலுரை அளிக்க வேண்டிய முதல்வர் எழுதிக் கொடுத்ததை படிப்பதை தவிர, நேரடியாக கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தி விட்டு, எதிர்வினை வந்து விடுமோ என்கின்ற பயத்தில் சபாநாயகர் விவாதத்தையே தவிர்த்து இருக்கிறார்.

கடந்த மூன்று நாட்களாக காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்க ஒத்திகை பார்த்தும், அது தொடர்பாக முதல்வர் பேசியது சொற்பமே. மற்ற அனைத்தும் காலம் காலமாக பரப்பப்பட்ட வதந்திகளையும், சமீபத்திய வாட்ச் அப் பேக்டரி பொய்களையும் கலந்து, ஒரு பிரதியை முதல்வருக்கு கொடுத்து விட்டார்கள் என்றுதான் நினைக்க தோன்றுகிறது என விஜய்யின் பேச்சு குறித்து தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, சட்டம் ஒழுங்கு குறித்தும், குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு பற்றியும், பிற மக்கள் பிரச்சனைகள் குறித்தும் பேச வேண்டிய சபை, இன்று சர்க்கஸ்கூடாரமாக மாறியிருக்கிறது. ஒன்று மட்டும் சொல்லத் தோன்றுகிறது. Not everything loud is true (சத்தமாகச் சொல்லப்படும் அனைத்தும் உண்மையல்ல).

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.